## நாமக்கல் கிழக்கு மாவட்டம்

# தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட மாடல் ஆட்சியில் 4 ஆண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!



**நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!**

| தேதி / நேரம் | கூட்டம் நடைபெறும்இடம் | பேச்சாளர் / இளம்பேச்சாளர் | தலைமை / முன்னிலை |
|---|---|---|---|
| | **இராசிபுரம் சட்டமன்றத் தொகுதி** | | |
| 08.05.2025 / மாலை 06.00 மணி | முள்ளுக்குறிச்சி பேருந்து நிறுத்தம், நாமகிரிப்பேட்டை ஒன்றியம் | தருண்விஸ்வநாதன், ச.பரத் | டாக்டர். மா.மதிவேந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். கே.பி.இராமசுவாமி, நாமகிரிப்பேட்டை ஒன்றிய செயலாளர் |
| 09.05.2025/ மாலை 06.00 மணி | விஜயலட்சுமிதியேட்டர்அருகில், இராசிபுரம்நகரம். | இளந்தளிர்இளங்கோ ச.பரத் | டாக்டர்.மா. மதிவேந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். என்.ஆர்.சங்கர், இராசிபுரம் நகர செயலாளர். |
| 11.05.2025 / மாலை 06.00 மணி | சிங்களாந்தபுரம்பேருந்துநிறுத்தம், அருகில், இராசிபுரம்ஒன்றியம். | இளந்தளிர்இளங்கோ ச.பரத் | டாக்டர்.மா.மதிவேந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். கே.பி.ஜெகநாதன், இராசிபுரம் ஒன்றிய செயலாளர். |
| 12.05.2025 / மாலை 06.00 மணி | பொன்பரப்பிப்பட்டிபேருந்துநிறுத்தம் அருகில், வெண்ணந்தூர்ஒன்றியம். | தருண்விஸ்வநாதன் ச.பரத் | டாக்டர்.மா.மதிவேந்தன், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர். ஆர்.எம்.துரைசாமி, வெண்ணந்தூர் ஒன்றிய செயலாளர். |
| | **சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி** | | |
| 10.05.2025/ மாலை 06.00 மணி | வரகூர்பேருந்துநிறுத்தம், எருமப்பட்டிஒன்றியம் | தருண்விஸ்வநாதன் இரா.சுதர்ஷனா | கே.பொன்னுசாமி, சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், பாலு(எ) P.பாலசுப்ரமணியன், எருமப்பட்டி ஒன்றிய செயலாளர். |
| 11.05.2025 / மாலை 06.00 மணி | பேளுக்குறிச்சிபேருந்துநிறுத்தம், சேந்தமங்கலம்ஒன்றியம் | அ.சான்பாஷா இரா.சுதர்ஷனா | கே.பொன்னுசாமி, சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், அ.அசோக்குமார், சேந்தமங்கலம் ஒன்றிய செயலாளர். |
| 12.05.2025 / காலை 10.00 மணி | செம்மேடுபேருந்து நிலையம், கொல்லிமலை ஒன்றியம். | ஜி.தமிழ்ச்செல்வி இரா.சுதர்ஷனா | கே.பொன்னுசாமி, சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், எஸ்.செந்தில்முருகன், கொல்லிமலை ஒன்றிய செயலாளர். |
| | **நாமக்கல் சட்டமன்ற தொகுதி** | | |
| 08.05.2025/ மாலை 06.00 மணி | கீரம்பூர்மாரியம்மன்கோயில், நாமக்கல்ஒன்றியம் | ஜி.தமிழ்ச்செல்வி இரா.சுதர்ஷனா | பெ.இராமலிங்கம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், வி.கே.பழனிவேல், நாமக்கல் ஒன்றிய செயலாளர். |
| 08.05.2025/ இரவு 07.00 மணி | சிட்கோகாலனி, காவேட்டிப்பட்டி, நாமக்கல் மேற்கு மாநகராட்சி | ஜனாட்எஸ்.எம். கௌஸ் ம.மோகநிதி | பெ.இராமலிங்கம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், அ.சிவக்குமார், நாமக்கல் மேற்கு நகர செயலாளர். |
| 09.05.2025 / மாலை 06.00 மணி | இராசிபாளையம், காட்டுபிள்ளையார்கோயில் அருகில், மோகனூர் கிழக்கு ஒன்றியம். | அ.சான்பாஷா இரா.சுதர்ஷனா | பெ.இராமலிங்கம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், பெ.நவலடி, மோகனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர். |
| 09.05.2025 / இரவு 07.00 மணி | அன்னைசத்யாநகர், 30வதுவார்டு, நாமக்கல் தெற்கு நகரம். | டி.டி.தண்டபாணி ம.மோகநிதி | பெ.இராமலிங்கம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், இராணா ஆர்.ஆனந்த், நாமக்கல் தெற்கு நகர செயலாளர். |
| 10.05.2025 / மாலை 06.00 மணி | புதுச்சத்திரம்பேருந்து நிறுத்தம் அருகில், புதுச்சத்திரம் வடக்கு ஒன்றியம். | ஜி.தமிழ்ச்செல்வி ம.மோகநிதி | பெ.இராமலிங்கம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், எம்.பி.கௌதம், புதுச்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர். |
| 11.05.2025/ மாலை 06.00 மணி | செல்லப்பட்டிபேருந்து நிறுத்தம் அருகில், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றியம். | ஜனாட்எஸ்.எம்.கௌஸ் ம.மோகநிதி | பெ.இராமலிங்கம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், ஆர்.ஜெயபிரகாஷ், புதுச்சத்திரம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர். |
| 12.05.2025 / மாலை 06.00 மணி | சின்னமுதலைப்பட்டி, 4வதுவார்டு, நாமக்கல் கிழக்கு நகரம். | எம்.ஆர். பன்னீர்செல்வம் ம.மோகநிதி | பெ.இராமலிங்கம், நாமக்கல் சட்டமன்ற தொகுதி உறுப்பினர், செ.பூபதி, நாமக்கல் கிழக்கு நகர செயலாளர். |

**கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி.**
செயலாளர் – நாமக்கல் கிழக்கு மாவட்ட
தி.மு.க.



திருப்பூர் மாவட்டம், காங்கேயம் வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் பொதுபணித் துறையின் சார்பில் 1 கோடியே 90 இலட்சம் மதிப்பீட்டில் காங்கேயம் சார்பதிவாளர் அலுவலக கட்டடம் கட்டும் பணியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் செந்தில்குமரன், வசந்தம் நா.சேமலையப்பன், கே.கே.சிவானந்தன், கருணைப்பிரகாஷ், எம்.எஸ்.சுப்பு, ஷோபனா சிவலிங்கம், எ.எஸ்.கே.கார்த்திகேயன், எம்.எஸ்.மோகனசெல்வம், சிவராஜா, உமாபதி, சலீம், சூரியபிரகாஷ், கமலவேணி உள்பட கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மத்திய மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அ.ஆனந்தி இல்ல திருமண வரவேற்பு விழாவில் கழக துணைப் பொதுச்செயலாளர், கனிமொழி கருணாநிதி கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் திருப்பூர் மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், டிகேடி மு.நாகராசன், நாமக்கல் ப.இராணி, செ.உமாமகேஸ்வரி, நா.மாலதி நாகராஜ், மேங்கோ அ.பழனிச்சாமி, சி.கோவிந்தசாமி, பி.ஆர்.செந்தில்குமார், செ.திலகராஜ், ப.கலைச்செல்வி உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், மகளிர் அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## குண்டடம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.17.65 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப்பணிகள்!

### அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் துவக்கி வைத்தனர்!

திருப்பூர், மே 6 –

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்டம், மூலனூர் அருள்மிகு ஸ்ரீவஞ்சியம்மன் திருக்கோவிலில் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் இளைப்பாறும் மண்டபத்தை திறந்து வைத்து, திருப்பூர் மாவட்டம், குண்டடம் ஒன்றியம், புங்கந்துறை ஊராட்சி, குமாரசாமி கோட்டையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.14.00 கோடி மதிப்பீட்டில் தாராபுரம் – வெள்ளகோவில் சாலை (செல்லாண்டியம்மன் கோவில்) குமாரசாமி கோட்டை செல்லும் சாலையில் அமராவதி ஆற்றின் குறுக்கே உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி, குண்டடம் ஒன்றியம், சிறுகிணர் ஊராட்சி, நொச்சிப்பாளையத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித்திட்டத்தின் கீழ் ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் சிறுகிணர், கொழுமங்குழி மற்றும் கொக்கம்பாளையம் ஊராட்சிகுட்பட்ட பகுதிகளில் அங்கன்வாடி மையம், கதிரடிக்கும்கலம், கான்கீரிட் சாலை, வேளாண்பொருள் கிடங்கு உள்ளிட்ட திட்டப்பணிகள் மற்றும் முதலமைச்சரின் கிராமசாலைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.1.94 கோடி மதிப்பீட்டில் சாடையபாளையம் ஊராட்சி கொளந்தாபாளையம் முதல் மானூர்பாளையம் வரை சாலை அமைக்கும் பணி மற்றும் ரூ.38.77 இலட்சம் மதிப்பீட்டில் வேலாயுதம்பாளையம் ஊராட்சியில் தேவராஜபட்டிணம் முதல் சுங்கிலிபாளையம் வரை சாலை அமைக்கும் பணி என மொத்தம் ரூ.17.65 கோடி மதிப்பீட்டில் புதிய பணிகளை துவக்கி வைத்தனர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப் பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் இன்றைய தினம் குண்டடம் ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் பல்வேறு புதிய திட்டப்பணிகளை துவக்கி வைத்து முடிவுற்ற பணிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளது. முதலமைச்சர் அவர்கள் தேர்தல் நேரத்தில் அறிவித்த வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்ற வேண்டும் என்கிற எண்ணத்தின் அடிப்படையில் பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிறார்கள்.

அமராவதி ஆற்றின் குறுக்கே தாராபுரம் பாலம், புதுப்பை பாலம் மற்றும் அக்கரப்பாளையம் பாலம் மட்டும் தான் இருந்தது. கடந்த முறை இந்த தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக நான் இருந்த பொழுது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் அடிப்படையில் பெரமியம் ஊராட்சியையும் சங்கரண்டாம்பாளையம் ஊராட்சியையும் இணைக்கும் வகையில் உயர்மட்ட பாலம் கட்டப்பட்டது. வேலப்பநாயக்கன்வலசு ஊராட்சியையும் மூலனூர் ஒன்றியத்தையும் எரசாம்பாளையம் கன்னிவாடி பேரூராட்சியை இணைக்கும் உயர்மட்ட பாலம், தழையூர் ஊராட்சியில் இடைக்காடு தீவில் மூன்று பாலங்கள் அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களும் நமது கோரிக்கையை ஏற்று இப்பாலம் கட்ட உத்தரவு வழங்கியுள்ளதற்கு எனது சார்பாகவும் எனது தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அடிப்படை கட்டமைப்பு வசதிகள் தான் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் மேம்படுத்தும். விவசாயிகள் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கும் எடுத்து செல்வதற்கும் சாலை வசதியும் பாலம் வசதியும் தேவை என்பதை உணர்ந்து அடிப்படைக் கட்டமைப்பு பணிகள் தற்போது நடைபெற்று வருகிறது.

அமராவதி ஆற்று தண்ணீரை வட்டமலை அணை, உப்பாறு அணைகளிலும் பயன்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். வட்டமலையோடை யின் குறுக்கே பெரிய குமாரபாளையம் அருகே தடுப்பணை அமைக்கும் பணி விரைவில் துவங்கப்பட உள்ளது. நஞ்சியாம்பாளையம் அருகில் தடுப்பனை அமைக்கும்பொழுது விவசா யத்திற்கு பயன்படுத்தியது போக மீதம் உள்ள நீரை தேக்கி நிறுத்த வைக்க முடியும். தாராபுரம் நகராட்சியில் சுத்திகரிக்கப்படும் தண்ணீரை சேகரித்து விவசாய வளர்ச்சிக்கு பயன்படுத்துவது தான் நமது இலக்காகும்.

கொடுமுடியிலிருந்து முத்தூர் காங்கேயம் கூட்டுக் குடிநீர் திட்டம் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில் ரூ.205.00 கோடி மதிப்பீட்டில் நடைமுறைபடுத்தப்பட்டது. தற்போதைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவின் அடிப்படையில் ரூ.63.00 கோடி மதிப்பீட்டில் பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்ற வருகிறது. சோழசிராண்மணியிலிருந்து வெள்ளகோவில், மூலனூர், தாராபுரம், பொங்கலூர், காங்கேயம் உள்ளிட்ட 7 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 1,252 ஊரக குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ.890.00 கோடி மதிப்பீட்டில் 4.91 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் மேற்கொள்ளப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டவுடன் மகளிருக்கு கட்டணமில்லா பேருந்து பயணத்திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கடன் தள்ளுபடி, நகைக்கடன் தள்ளுபடி, 1,50,000 விவசாயிகளுக்கு மின்இணைப்பு வழங்குதல், பள்ளி சிறார் கண்ணொளி காப்போம் திட்டம், பள்ளிக் குழந்தைகள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், தமிழ்புதல்வன்திட்டம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்கள் அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள் என்று அமைச்சர் தெரிவித்தார்.

அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்கள் முன்னேற்றத்திற் காக பல்வேறு திட்டங் களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் நமது மாவட்டங்களில் இருக்கக்கூடிய திட்டப் ப்பணிகளை அனைத்தும் விரைவாக மக்களுடைய பயன்பாட்டு ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளார்கள். அந்த வகையில் அனைத்து பணிகளும் விரைவாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 10 நீண்ட கால கோரிக்கைகளை முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ள கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 10 நீண்டகால கோரிக்கைகள் வழங்கப்பட்டதில் ஒன்றான புங்கதுரை பாலம் தற்போது அமைக்கப்பட உள்ளது. இந்த பாலம் இப்பகுதி பொதுமக்களுக்கு வரபிரசாதமாக அமையுள்ளது. குறிப்பாக தாராபுரம் சட்டமன்றத் தொகுதியில் அமராவதி ஆற்றின் தடுப்பணை ரூ.12.00 கோடி மதிப்பீட்டில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அரசு கலைக் கல்லூரி கட்டப்பட்டு தற்போது மூன்று வருடங்களாக செயல்பட்டு வருகிறது. ரூ.24.00 கோடி மதிப்பீட்டில் அரசு மருத்துவமனை பணிகள் முடிந்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட உள்ளது. சார்பதிவாளர் அலுவலகம், வணிக வளாகம், கூட்டுறவுத்துறை மேலாண்மை பயிற்சி மையம் உள்ளிட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மூலனூர் தாராபுரம் பகுதிகளில் உள்ள தண்ணீர் பிரச்சனையை தீர்ப்பதற்காக ரூ.64.00 கோடி மதிப்பீட்டில் நிதி ஒதுக்கப்பட்டு குடிநீர் குழாய்கள் பழுது பார்க்கும் பணி நடைபெற்று வருகிறது. மூலனூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய அலுவலகம் கட்டும் பணிக்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தாராபுரம் வருவாய் கோட்டாட்சியர் ஃபெலிக்ஸ் ராஜா, ஒன்றிய கழக செயலாளர்கள் சு.சந்திரசேகரன் குண்டடம் மேற்கு, சிவ.செந்தில்குமார் குண்டடம் கிழக்கு, பொதுக்குழு உறுப்பினர் கே.எஸ்.கருணாகரன், குண்டடம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நாகலிங்கம், ரேணுகா தேவி, உதவி பொறியாளர் லோகேஷ் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை, கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!



நெல்லை, மே 6 -

நெல்லை கிழக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் வருகின்ற 08.05.2025வியாழக்கிழமை மாலை 04.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ம.கிரகாம்பெல் தலைமையில் நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் வைத்து நடைபெற உள்ளது.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் தெரிவித்துள்ளார்

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட அணி அமைப்பாளர்கள்தவறாது பங்கேற்று கருத்துக்களை வழங்க கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:1. முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத் தளபதியார் அவர்கள் தலைமையில் 03.05.2025ல் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள்.

2. ஜுன் 1 மதுரையில் நடைபெற உள்ள பொதுக்குழு கூட்டம்.

3. ஜுன் 3 முத்தமிழ் அறிஞர் டாக்டர்.கலைஞர் பிறந்தநாள் நிகழ்ச்சி.

4. நாடு போற்றும் நான்காண்டு; தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்.

5. கழக வளர்ச்சி பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ., அறிவிப்பு!



இராமநாதபுரம், மே 6 -

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் நாளை (7.05.2025 புதன்கிழமை மாலை 4.30 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத்தலைவர் வ.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் வனம் மற்றும் கதர் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக்குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன் , தலைமை கழகத்தால் நியமிக்கப்பட்ட தொகுதி பார்வையாளர்கள் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர் (பரமக்குடி தொகுதி பார்வையாளர்), மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் அருண் (திருவாடனை தொகுதி பார்வையாளர்), புதுக்கோட்டை தெற்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் எஸ்.சுதர்சன் (இராமநாதபுரம் தொகுதி பார்வையாளர்), விருதுநகர் தெற்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வேல்முருகன் (முதுகுளத்தூர் தொகுதி பார்வையாளர்) ஆகியோர் கலந்து கொள்ள இருக்கிறார்கள். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், இந்நாள் முன்னாள் ஊரக மற்றும் நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக, வார்டு கழக செயலாளர்கள், வாக்குச்சாவடி நிலைக் குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) மற்றும் நிர்வாகிகள் உள்ளிட்ட கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் 1. கழக தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலா ளர்கள் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்ட தீர்மானங்கள் குறித்து,

2. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.